2010 ஏப்ரல் 15] [திரு. வை. சிவபுண்ணியம்]

எடுப்பதற்கு முன்பாகவே முக்கால் மணி நேரம் பேச அனுமதிக்கிறீர்கள். பின்னர் எங்களுடைய நேரம் எடுக்கப்படுகிறது. இதுபற்றிக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(எ) வேடசந்தூர் வட்டம், வடமதுரை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட செந்தில்குமார் மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, வடமதுரை காவல் நிலையத்தில் 5-4-2010 அன்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட செந்தில்குமார் மர்மமான முறையில் இறந்துள்ளதால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. ஞா. ஜாண் ஜோசப், திரு. வே. மாரிமுத்து, திருமதி ரா. லீமா றோஸ், திரு. ப. டில்லி பாபு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. உலகநாதன் ஆகியோர் விதிகள் 56, 55 ஆகியவற்றின்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்களே அவரை encourage செய்கிறீர்களா?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: எங்கள் கட்சியின் சார்பாகத்தான் அவர் பேசுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைத்தான் நான் கூப்பிட்டிருக்கிறேன். திரும்பவும் ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-4-2010 ஆம் நாளன்று, திண்டுக்கல் மாவட்டம்,

வடமதுரை காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட செந்தில்குமார் அங்கே இறந்து போய்விட்டார் என்ற ஒரு நிலை உருவாகி, காவல் துறையினரின் நடவடிக்கையின் அடிப்படையில் அவர் இறந்திருக்கிறார் என்று அந்தப் பகுதி மக்கள் சாலை மறியல், பேருந்து தாக்குதல், காவல் நிலைய தாக்குதல் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர். இதை நான் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு காரணம், காவல் துறையினர் விசாரணைக்காக அழைத்துச் செல்கிறபோது, சில பேரிடத்திலே அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டாக இருக்கிறது. காவல் துறையில் lock-up death கூட ஏற்படுகிறது. அதைப்போல சிறைச்சாலைகளிலும் சில பேர் இறக்கின்ற சூழ்நிலைகளும் உருவாகியிருக்கின்றன. இதையெல்லாம் மனதிலே கொள்ள வேண்டும். ஏன் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன? இதைத் தடுப்பதற்குக் காவல் துறைக்கு ஏன் அறிவுரை வழங்கவில்லை? விசாரணைக்கு அழைத்துச் செல்கின்றவர்களுக்கு இதுபோன்ற நிலைகள் ஏற்படுகிறபோது, காவலர்கள் எப்படி அவர்களை அழைத்துச் சென்றார்கள், எப்படி விசாரணை நடத்தினார்கள், எதன் அடிப்படையில் அவர் இறந்தார் என்பதைப் பற்றி இந்த நாடு தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

இந்த அரசைப் பொறுத்தவரையிலும், காவல் துறைக்கு நல்ல அறிவுரைகளை வழங்கி, விசாரணைக் கைதிகளாக இருந்தாலும் சரி, lock-up-லே இருக்கிற கைதிகளாக இருந்தாலும் சரி, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிற கைதிகளாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், அவர்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பது, இந்த அரசினுடைய கடமையாக இருக்கிறது. ஆனால், அதைத் தவறவிட்டு, இன்றைக்கு இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவது ஜனநாயக மரபுக்கு ஏற்றதாக இல்லை. இனிமேல் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி அமர்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

2010 ஏப்ரல் 15]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அருகே இருக்கிற மொட்டனம்பட்டியைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர் மாரியம்மன் திருவிழாவிற்கு சென்றவர், குடி போதையிலே ரகளை செய்ததாக சுரேஷ்குமார் என்பவரால் புகார் செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். 5-4-2010 ஆம் தேதி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அவர் காவல் நிலையத்திலே காவலர்களால் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பிறகு அங்கிருந்து அவர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு ரிமாண்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டு, ரிமாண்டும் செய்யப்பட்டு ரிமாண்ட் செய்த பின்னர், அவருக்கு நெஞ்சு வலி என்று சொன்ன பின்னர், அவரை மருத்துவமனைக்கு அனுப்புகிற காலக்கட்டத்தில் அவர் இறந்து போனதாகச் செய்தி வந்திருக்கின்றது. இங்கே நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், அவர் கைது செய்யப்பட்ட பிறகு காவல் நிலையத்தில் எவ்வளவு நேரம் தங்க வைக்கப்பட்டார்; அங்கு நடந்த நிகழ்வுகள் என்ன, அவருடைய உடலில் ஏதாவது காயங்கள் இருக்கின்றனவா? இறந்ததற்கான காரணத்தை அறிய இந்த அரசு RDO enquiry போட்டிருக்கிறது. RDO enquiry மூலம் இறப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? உதவி காவல் ஆய்வாளர் திருமலை முத்துசாமி என்பவர் ஏற்கெனவே சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதற்குக் காரணம், அவருடைய மனைவி புகார் செய்து, அவர் தாக்கப்பட்டார் என்ற நிலை எல்லாம் இருக்கிறது. Postmortem-ல் இறப்புக்கான காரணமாக என்ன கண்டறியப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு அரசு அறிவிக்குமா? இப்படிக் காவல் நிலையத்தில் வைத்திருக்கிறபோது இனிமேல் custodial death என்பதே வராமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த செந்தில்குமார் என்கிற இளைஞர் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச்

[திரு. தி. வேல்முருகன்] [2010 ஏப்ரல் 15

செல்லப்பட்டு அங்கு காவலர்கள் அவரைத் தாக்கியதாகவும், அதனால் அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதாகவும், நீதிமன்ற ரிமாண்டுக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டு நீதிபதியிடத்திலே அவர் இதைத் தெரிவித்திருக்கிறார். நீதிபதியும் அவருக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். அப்படி உத்தரவிட்டும் திரும்பவும் அவர் காவல் நிலையத்திற்கு வந்தது எப்படி? காவல் நிலையத்தில் எப்படி இந்த custodial death நடந்தது என்பதையும், அதற்காக தமிழக அரசு அறிவித்திருக்கின்ற கோட்டாட்சியருடைய enquiry-ல் என்ன தகவல் கிடைத்திருக்கிறது என்பதையும் இந்த அவைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோ, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களோ விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டுகூட என்னுடைய தொகுதியில் குள்ளஞ்சாவடியில் ஒரு custodial death நடந்தது. அந்தப் பிணம் கிடக்கிற இடத்தில், துயரத்தில் உறவுகள் கூடி அழுது நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்கிறபோதும் அல்லது அவருடைய உறவுகள் சிறு, சிறு அசம்பாவிதச் சம்பவங்களில் ஈடுபடுகிறபோதும் காவல் துறை அதிகாரிகள் பேசுகின்ற அணுகுமுறை எப்படியுள்ளது என்றால் அந்த custodial death-க்கு உள்ளாகிறவர்களுடைய உறவினர்களை அழைத்துப் பேசி சமாதான முறையில் அதைக் கையாளுவதற்குப் பதிலாக, சில காவல் துறை உயர் அதிகாரிகள் எடுத்தவுடனே லத்தி சார்ஜ் என்பதும்—நேற்றுகூட பெரியகுளம் அருகில் உள்ள ஒரு ஊரில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது—இதுபோன்று emotionalஆக சில பிரச்சினைகளைக் கையாளுகின்ற காவல் துறை உயர் அதிகாரிகளை இதுபோன்ற சம்பவங்களுக்கு அனுப்பாமல் இருக்க வேண்டும். பாதிப்புக்குள்ளான அந்தக் குடும்பங்களையே லத்தி சார்ஜ் செய்வதும், அடித்து நொறுக்குவதும், அவர்களுடைய உறவுகளையே கைது செய்து, வழக்குகளில் கடுமையான பிரிவுகளின் கீழே சிறையில் அடைப்பதும் வேதனைக்குரிய செய்தியாக இருக்கிறது. அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு காவல் துறை இயக்குநர் அவர்களை அழைத்து, இனிவரும் காலங்களில் இதுபோல் custodial death-காவல் நிலைய மரணங்கள்-இல்லாமல் பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இறந்து போன அந்த செந்தில்குமாருடைய குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உயரிய, உரிய தொகையை வழங்கி அவருடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கான

2010 ஏப்ரல் 15] [திரு. தி. வேல்முருகன்]

முயற்சியையும் இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, வடமதுரை அருகில் இருக்கக்கூடிய மொட்டனம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற திருவிழாவில் ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி திரு. செந்தில்குமார் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர் மீதான புகாரின்பேரில் அன்று இரவு 11-00 மணியளவில் வடமதுரை காவல் நிலையத்திற்கு அவர் காவலர்களால் அழைத்துச் செல்லப்படுகிறார். ஏப்ரல் 5 ஆம் தேதி அதிகாலை 6-45 மணியளவில் அவர் மரணம் அடைந்ததாகச் செய்தி வருகிறது. இடைப்பட்ட இந்த நேரத்தில் காவல் நிலையத்தில் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார் என்பதைத்தான் பொது மக்களும் மற்றும் இறந்து போன செந்தில்குமாருடைய உறவினர்களும் இன்றைக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-15

பொதுவாகவே, வேடசந்தூர் வட்டாரத்திற்குட்பட்ட காவல் நிலையங்களில் பொய் வழக்குப் போடுதல், அச்சுறுத்துதல் போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அதனுடைய ஒரு தொடர்ச்சியாக வடமதுரை காவல் நிலையத்திற்குட்பட்ட ஒரு திருவிழாவில், திரு. செந்தில்குமார், தவறுகள் செய்திருந்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்தான். ஆனால், இந்த அளவிற்குத் தாக்கப்பட்டு அவர் மரணம் அடையக்கூடிய ஒரு அசம்பாவிதம் நடந்திருப்பது உண்மையிலேயே கவலைப்படத்தக்கது. Lock-up-ல் நடந்திருக்கக்கூடிய இந்த மரணத்திற்கு மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கடும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட காவலர்கள்மீதும், துணை ஆய்வாளர், ஆய்வாளர், வேடசந்தூர் வட்டாரத்தினுடைய துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர்மீது உரிய விசாரணையும், நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். இரண்டு சிறு குழந்தைகளோடு கணவரை இழந்து இருக்கக்கூடிய திரு. செந்தில்குமாரினுடைய துணைவியார்

[செல்வி கே. பாலபாரதி] [2010 ஏப்ரல் 15

அவர்களுக்கு, அவரது குடும்பத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அரசு நிவாரணத் தொகை வழங்கி உதவிட முன்வரவேண்டும். இதுபோன்ற மனித உரிமை மீறல், காவல் நிலையங்களில் நடைபெறக்கூடிய மரணம் போன்ற சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடமதுரை காவல் நிலையத்தில் lock-up-ல் இருந்த திரு. செந்தில்குமார் மரணம் அடைந்தது வேதனைக்குரிய சம்பவம். இப்படிப்பட்ட lock-up மரணங்கள் தொடரக் கூடாது என்று தொடர்ந்து இந்த அவையிலே நாம் விவாதித்து வருகிறோம். காவல் துறையைப் பொறுத்தவரையிலும் வழக்கு என்னவென்றால், ஒரு திருவிழாவிலே கலாட்டா செய்தார் என்ற காரணத்திற்காக அவர் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அழைத்துச் செல்லப்பட்ட திரு. செந்தில்குமார் மது அருந்தி கலாட்டா செய்தார் என்றும் பத்திரிகைச் செய்தியிலே வருகிறது. இந்தச் சம்பவங்களைப் பார்க்கிறபொழுது ஒரு பெரிய குற்றச் செயலுக்காக திரு. செந்தில்குமார் கைது செய்யப்படவில்லை என்பது தெரிகிறது. மது அருந்துவது, கலாட்டா செய்வது என்பது இப்பொழுது தமிழகத்திலே எங்கும் நடைபெறுகிறது. ஏனென்றால், மூலைக்கு மூலை மதுக் கடைகள் இருக்கிறபொழுது, ஆங்காங்கே மது அருந்திவிட்டு அவர்கள் விருப்பம்போல சில காரியங்களில் ஈடுபடுவது என்பது நடைபெறுகிறது. இதையெல்லாம் தடுப்பதற்கு என்ன செய்வது என்ற தனித்த முயற்சிகளை அரசு எடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட திரு. செந்தில்குமார் அந்தக் காரணத்திற்காக மட்டுமே காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே காவலிலே வைத்திருந்தபொழுது தாக்கப்பட்டாரா அல்லது வேறு விதமான காரணங்களோடு சேர்ந்து காவல் துறையினருடைய விருப்பத்தின் அடிப்படையில் அது செய்யப்பட்டதா அல்லது புகார் கொடுத்தவர்களுடைய விருப்பத்தில் நடைபெற்றதா என்பதெல்லாம் கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே, இவற்றை எல்லாம் நம்முடைய அரசு தீர விசாரிக்க வேண்டும். Lock-up-ல் மரணம் அடைவது என்பது

2010 ஏப்ரல் 15] [திரு. வை. சிவபுண்ணியம்]

தொடரக்கூடாது. குறிப்பாக காவல் துறையில் பணியாற்றக் கூடியவர்களுக்கு மனநிலை சம்பந்தப்பட்ட ஒரு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியதை மிக அவசியமாக நான் கருதுகிறேன். அவர்கள் உணர்ச்சிவசப்படுவதும், இப்படித் தாக்கி விடுவதும் தொடர் சம்பவமாக இருக்கிறது.

இந்த செந்தில்குமார் குடித்துவிட்டு கலாட்டா செய்ததால் கைது செய்யப்பட்டார்; எனக்கு இருக்கிற சந்தேகம் திரு. செந்தில்குமாரைக் கைது செய்து lock-up-லே வைத்து அடித்தவர்களும் குடித்துவிட்டுத்தான் அடித்திருப்பார்கள் என்பது என்னுடைய நம்பிக்கை. இது தவறா இல்லையா என்பதெல்லாம் இல்லை. ஏனென்றால் இவ்வாறு பல சம்பவங்கள் இருக்கின்றன. காவல் துறையினர் தினசரி குடித்துவிட்டு அப்படிப்பட்ட பணிகளிலே ஈடுபடுகிறார்கள். ஆகவே, இருவரும் அந்த நிலைமையில் இருக்கிறபொழுதுங்கூட இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடப்பதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, காவல் துறையினருடைய செயல்பாடு குறித்து தனித்த முயற்சிகள் எடுத்து அவர்களுடைய மன நிலையைச் சரி செய்ய வேண்டிய கட்டாயம் தமிழகத்தில் இருக்கிறது. அது தேசிய அளவிலும் இருக்கிறது, நம்முடைய தமிழகத்திலும் இருக்கிறது. இதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தனித்த முயற்சி எடுக்கவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, இறந்த திரு. செந்தில்குமார் குடும்பத்திற்கு நம்முடைய மாநில அரசின் சார்பாக நிதி உதவி செய்யவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, வடமதுரை காவல் நிலையத்திற்கு *5-4-2010* அன்று விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட திரு. செந்தில்குமார் மர்மமான முறையில் இறந்துள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செங்கோட்டையன் அவர்கள், திரு. ஞானசேகரன் அவர்கள், திரு. வேல்முருகன் அவர்கள், செல்வி பாலபாரதி அவர்கள், திரு. சிவபுண்ணியம் அவர்கள் ஆகியோர் சில கருத்துகளை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

[திரு. மு.க. ஸ்டாலின்] [2010 ஏப்ரல் 15 முற்பகல் 11-20

5-4-2010 அன்று அதிகாலை வடமதுரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, மொட்டனம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர், அதே கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார், தன்னைக் கத்தியைக் காட்டி பணம் கேட்டு மிரட்டியதாகக் கொடுத்த புகாரின் அடிப்படையில், வடமதுரை காவல் நிலைய உதவி ஆய்வாளர், காவல் நிலைய குற்ற எண் *155/10*, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் *387, 506* (ii)—ன்படி வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு, எதிரி செந்தில்குமாரை அதிகாலை *3-30* மணிக்குக் கைது செய்து, *4-00* மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து, தக்க பாதுகாப்பில் வைத்துள்ளார்.

அன்றையதினமே உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர் ரவிச்சந்திரன், முதல்நிலைக் காவலர் சசிகுமார் ஆகியோரை வழிக்காவல் பணிக்காக நியமித்து, செந்தில்குமாரை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்திவருமாறு அனுப்பி வைத்துள்ளார். அவர்கள் செந்தில்குமாரை வேடசந்தூர் நீதிமன்ற நடுவர் முன்பு காலை *5-45* மணிக்கு ஆஜர்படுத்தி, *15* நாட்கள் நீதிமன்றக் காவல் பெற்று வேடசந்தூர் கிளைச் சிறைச்சாலையில் ஒப்புவிக்கக் கூட்டிச் சென்றுள்ளனர். வழியில் செந்தில்குமார், நெஞ்சு எரிச்சலாக இருப்பதாகத் தெரிவித்ததால் வழிக்காவல் சென்ற காவலர்கள் அவரை உடனடியாக வேடசந்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அப்போது அலுவலகப் பணியிலிருந்த மருத்துவர் தினேஷ்குமார் சிகிச்சை அளித்திருக்கிறார். சிகிச்சையிலிருந்தபோதே செந்தில்குமார் இறந்திருக்கிறார்.

இந்த நிலையில், செந்தில்குமாரின் குடும்பத்தார் மற்றும் அவரது உறவினர்கள், செந்தில்குமாருக்கும், சுரேஷ் என்பவருக்கும் ஏற்கெனவே சிவில் பிரச்சினை சம்பந்தமாக இருக்கக்கூடிய முன்விரோதத்தினால், சுரேஷ் வேண்டுமென்றே பொய்ப் புகார் கொடுத்துள்ளதாகவும், சுரேஷ்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரி, வடமதுரை காவல் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களுள் சிலர் காவல் நிலைய வாயிலிலிருந்த மேஜை, நாற்காலி ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்தியிருக்கிறார்கள். காவல் துறையினர் தலையிட்டு, அவர்களைக் கலைந்து போகச் செய்தனர். பின்னர், அவர்கள் திண்டுக்கல்-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல்

2010 ஏப்ரல் 15] [திரு. மு.க. ஸ்டாலின்]

செய்து, அவ்வழியாகச் சென்ற இரண்டு பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியிருக்கிறார்கள். திண்டுக்கல் சரகத் துணைத் தலைவர், கூடுதல் காவல் படையினரோடு சென்று சாலை மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களைக் கலைந்து போகச் செய்திருக்கிறார். இது தொடர்பாக வடமதுரை காவல் நிலையத்தில் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

செந்தில்குமார் இறந்து போனது குறித்து, வடமதுரை காவல் நிலைய தலைமைக் காவலர் ரவிச்சந்திரன் வேடசந்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் *193/10*, பிரிவு *174*, குற்ற விசாரணை முறைச் சட்டப்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, பழனி கோட்டாட்சியரின் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இறந்த செந்தில்குமாரின் உடல் வேடசந்தூர் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு, பிறகு அவரது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரேதப் பரிசோதனையில், அவரது உடலில் காயங்கள் ஏதும் இல்லையெனவும், கடுமையான மாரடைப்பால் இறந்திருக்கலாம் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். பிரேதப் பரிசோதனை அறிக்கை இன்னும் பெறப்படவில்லை.

விசாரணையில், இறந்துபோன செந்தில்குமாரை உதவி ஆய்வாளர் திருமலை முத்துசாமி கைது செய்தபோது, செந்தில்குமார் குடிபோதையில் இருந்தது தெரிந்தும், அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி குடிபோதைச் சான்று பெற்று, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தாமல், தனது கடமையிலிருந்து தவறிய குற்றத்திற்காக உதவி ஆய்வாளரை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் தற்காலிகப் பணி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார். பழனி கோட்டாட்சியர் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு வருகிறார். அவரது அறிக்கை கிடைக்கப்பெற்ற பின் அதனடிப்படையில், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் *11-25*

மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும் இங்கே பேசுகிறபோது சில தகவல்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றதற்குப் பிறகு முறையான நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும். அந்த அடிப்படையிலே, நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கையை எடுப்பார்கள் என்கிற நம்பிக்கையை இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லி, இங்கே வழங்கியிருக்கக்கூடிய இந்த சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு இந்த விளக்கமே போதும் என்கிற நம்பிக்கையோடு அமைகிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(அ) கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.419,42,44,000/-, மூலதனக் கணக்கில் ரூ.390,61,04,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.9,54,66,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 12, திரு. கோவை தங்கம்.